சென்னை விமான நிலையத்தில் இருந்து

# கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் நீட்டிப்பு

- முதல்கட்ட ஆய்வு விரைவில் தொடக்கம்

■ சென்னை

சென்னை விமான நிலையத்தில் இருந்து வண்டலூர் அடுத்த கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் திட்டத்தை நீட்டிப்பது தொடர்பான முதல்கட்ட ஆய்வு விரைவில் நடக்க உள்ளது.

சென்னையில் 35 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 10 கி.மீ. தூரத்துக்கான பணிகள் முடிக்கப்பட்டு, அதில் ரயில் சேவை வரும் ஜனவரியில் தொடங்கப்பட உள்ளது. 2-வது கட்டமாக மாதவரம் - மயிலாப்பூர் - சிறுசேரி மற்றும் மாதவரம் - கோயம்பேடு - பெரும்பாக்கம் - சோழிங்கநல்லூர் மற்றும் நெற்குன்றம் - கோயம்பேடு - விவேகானந்தர் இல்லம் ஆகிய 3 வழித் தடங்களில் 105 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் திட்டப் பணிகளை மேற்கொள்ள நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன.

சென்னை மாநகரின் எல்லை விரிவடைந்து வருவதால், போக்குவரத்து அதிகரித்து வருகிறது. எனவே, தற்போது விமான நிலையம் வரை இருக்கும் மெட்ரோ ரயில் திட்டம், வண்டலூர் அருகே அமையவுள்ள கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையம் வரை விரிவாக்கம் செய்யப்படும் என்று முதல்வர் பழனிசாமி ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இதற்கான முதல்கட்ட ஆய்வுப் பணி விரைவில் தொடங்க உள்ளது. இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:

விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் வரையிலான மெட்ரோ ரயில் நீட்டிப்பு திட்டம் குறித்து ஆரம்பகட்ட ஆய்வை விரைவில் நடத்த உள்ளோம். எந்த வழித்தடங்களில் அமைக்கலாம், மண் அமைப்பு, நில வசதி குறித்து அடிப்படை ஆய்வு நடத்தப்படும். அதன்பிறகு, எந்தெந்த இடங்களில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைப்பது, எந்தெந்த இடங்களில் உயர்மட்ட அல்லது சுரங்கப்பாதையில் மெட்ரோ ரயில்பாதை அமைப்பது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு நடத்தப்படும். அதன்பிறகு, முழு திட்ட அறிக்கையை தயாரித்து, தமிழக அரசு மூலம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.